IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE,
GUDIYATHAM, VELLORE DISTRICT.

C.C.NO.256/2019

DEPOSITION OF WITNESS P.W.1

| | | |
|---|---|---|
| NAME | : | KARTHIKEYAN |
| FATHER'S NAME | : | ARUMUGAM |
| VILLAGE | : | PERUMPADI |
| OCCUPATION | : | PRIVATE |
| AGE | : | 47 |

Solemnly affirmed in accordance with the provisions of Section 3 and 4 of the Indian Oaths Act 1969, r/w rule 35 and 36 of Criminal Rules of Practice 2019 of the 4th day of March 2025.

**சாட்சிக்கு நீதிமன்ற ஊழியரால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது.**

1 முதல் 3 எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் இல்லை.

**முதல் விசாரணை:**

நான் பெரும்பாடி கிராமத்தில் குடியிருந்து தனியாரில் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். அவர்கள் தான் என்னை அடித்தார்கள். கடந்த 07.10.2018 ஆம் தேதி மாலை 06.00 மணியளவில் நான் பரதராமி ரோட்டில் செங்காளபள்ளியில் நான் ஓரமாக நின்றுகொண்டிருந்தபோது அங்கு வந்த 1 முதல் 3 எதிரிகள் நான் அவர்களை ஓரமாக நிற்சொன்னதற்கு என்னை அசிங்கமாக திட்டி, கீழே தள்ளி என் முகத்தின் மீது குத்தினார்கள். அதனால் எனக்கு பற்கள் சேதமடைந்தது. பின்னர் ஆம்புலன்ஸ் மூலம் குடியாத்தம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். பின்னர் அன்றைய தினமே பரதராமி காவல் நிலைய போலிசார் மருத்துவமனைக்கு வந்து விசாரித்து என்னிடம் புகார் வாக்குதுமூலத்தை வாங்கினார்கள். மருத்துவரின் ஆலோசனைபடி மேல் சிகிச்சகைாக வேலூர் அடுக்கம்பாறை அரசு மருத்துவமனையில் சேர்ந்து 15 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்தேன். தற்போது என்னிடம் என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்த கையொப்பம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

**Selvi.R.Saranya.,B.A.,LLB(Hons).,LLB.,**
**Judicial Magistrate,**
**Gudiyatham.**